**கலவான பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலவான பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 1,145,000 கிரயமான டபள்கெப் வண்டியொன்று 2015 யூன் 11 ஆந் திகதி 929,750 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் கணக்குகளிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அதனைத் திருத்தாமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 1,145,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

12 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள நிதிக்கூற்றுக்களின் மீதிக்கும் பட்டோலைகளுக்குமிடையிலான மீதிக்கும் இடையே ரூபா 24,549,811 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 39,211 தொகையான மலசலகூட வரிக்காக விரிவானபட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,776,084 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,331,362 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 3,444,722 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 3,444,722 இனால் அதிகரித்தமை தொடர்பில் 02 வருமான விடயங்களில் ரூபா 4,516,290 அதிகரிப்பும், 02 செலவின விடயங்களில் ரூபா 3,414,015 குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 நிதிக்கட்டுப்பாடு

03 வங்கிக் கணக்குகளின் காசேட்டு மீதிக்கும் வங்கிக் கூற்றின் மீதிக்குமிடையே காணப்பட்ட ரூபா 48,905 கூட்டுத்தொகையான வேறுபாடு தொடர்பாக உரியவாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | பாதீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ள படியான வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 7,530 | 6,200 | 4,205 |
| வாடகை | 4,368 | 328 | 5,134 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,207 | 330 | - |
| ஏனைய வருமானம் | 34,635 | 28,810 | 11,128 |

## 2.4.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது ஏனைய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவைவிட 8 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வீதவரியும் வரியும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவைவிட முறையே 70 சதவீதம், 33 சதவீதம், 72 சதவீதம், 21 சதவீதம் மற்றும் 53 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 2.4.3 ஆதனவரி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 2,639,591 ஆக இருந்ததுடன் அதனுள் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையுடன் உள்ள 68 ஆதனவரி அலகுகள் காணப்பட்டதுடன். குறித்த நிலுவை ரூபா 1,257,768 அதாவது மொத்த நிலுவையில் 48 சதவீதமாக இருந்தது.

## 2.4.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான இறைச்சிக் கடைக்கும் மீன் தட்டிக்கும் 2014 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 669,918 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலவான வாராந்த சந்தைக்காக 2016 செப்தெம்பர் முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 408,400 தொகையான நிலுவை வாடகையும் தண்டப்பணமும் 2017 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

### 2.4.5 ஏனைய வருமானம்

----------------------------------

1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் IV (ஆ) ஆம் பகுதியின் 39 ஆம் அத்தியாயத்தின் உபவிதி 01 இன் பிரகாரம், காட்சிப்படுத்துகின்ற 05 பெனர்கள் மற்றும் விளம்பர பதாதைகளிலிருந்து மாத்திரம் ரூபா 18,056 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. கட்டணம் அறவிட வேண்டியிருந்த 07 பெனர்கள் மற்றும் அமைக்கப்பட்ட உருவப்படங்களிலிருந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

### 3.1 செயலாற்றல்

----------------------------

பாதீட்டின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது கைத்தொழில்களுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்த போதும், செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் கூட்டுமொத்தமாக ரூபா 2,607,979 தொகை செலவில் 03 வேலைகளும், மாகாண சபை நிதியத்தின் கீழ் கூட்டுமொத்தமாக ரூபா 2,172,264 தொகை செலவில் 07 வேலைகளும் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

வருமான உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்ட வருமானப் பணம் அத்தினமே சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் சபைக்கு பணத்தைக் கையளிக்கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் அத்திகதி வரை சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் நாளாந்தம் ரூபா 20,000 இற்கும் ரூபா 40,000 இற்கும் இடையிலான பணம் 03 நாட்கள் முதல் 10 நாட்கள் வரையிலான காலம் கையில் வைத்திருந்ததன் பின்னர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் நாளாந்த வருமானத்தை கையில் வைத்திருந்ததன் மூலம் சபையின் நிதி தனிப்பட்ட பாவனைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்பாடற்ற 03 வங்கிக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 273,361 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன், அந்தப் பணம் பயன்பாடுள்ள பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான இறைச்சிக் கடை மற்றும் 05 மீன் கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கு கேள்வி சமர்ப்பிக்கப்படாமை மற்றும் குறுகிய காலத்தில் கேள்வியைக் கைவிடல் போன்ற காரணங்களால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு தவறியிருந்ததுடன் அந்தக் கடைக்காக மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் இரண்டு இழுவைப் பெட்டிகள் என்பன 2005 யூலை முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2017 யூலை வரையிலும் உரிய பழுதுபார்த்தலை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கலவான தொலஹேன வீதித் திருத்த வேலைகள் ரூபா 1,038,991 தொகை செலவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், ஒரு வேலை விடயத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட அளவினை விட மேலதிகமாக ரூபா 25,775 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பனாபொல கொஸ்குலன வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலைக்காக ரூபா 1,026,178 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு அறிக்கையில் ஒரு வேலை விடயத்தின் கீழ் 1:2:4(3/4) கலவையில் கொங்கிரீட் இடுவதற்காக ஒரு கன மீற்றருக்கு ரூபா 14,381 வீதம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், சப்ரகமுவ மாகாண வீதி விலைப் பதிவேட்டின் பிரகாரம் ஒரு கன மீற்றருக்குச் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 13,657 ஆனமையால்

60.59 கன மீற்றருக்காக ரூபா 43,806 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 கழிவப் பொருள் முகாமைத்துவம்

சபையினால் உக்கும் மற்றும் உக்காத கழிவுப் பொருட்கள் பிரித்து கையளிக்கப்பட்டிருந்த போதும், அகற்றும் போது குழிகளுக்குள் ஒன்றாக இட்டு எரிக்கப்பட்டிருந்தமை மற்றும் எரிப்பதற்கு முடியாத கழிவுகள் தொடர்பாக முறையான முகாமைத்துவம் செய்யப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் 36 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட மொத்தக் கூட்டுத்தொகையான ரூபா 1,642,830 தொகை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 2,224,698 தொகையான 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | வருடத்திற்குரிய நிர்ணயிக்கப்பட்ட வருமானங்களை இனங்காணாமை |
| | (ii) | பேரேட்டுக் கணக்குகளும் பட்டோலையும் இணங்காமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை. |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு செய்தமை |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (ஊ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | முறையான வகையில் அகற்றப்படாமை |